# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.10 நாள் 20.11.2025

| CC. No. | 238/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | ராதிகா | த/பெ. | செல்வமணி |
| வயது | 39 | தொழில் | விவசாயம் |
| கிராமம் | நெடுங்காடு | தாலுக்கா | காரைக்கால் |

<u>(எதிரிகள் ஆஜர்,).</u>

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது நன்னிலத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டு குடித்தனம் நடத்தி வருகிறேன். எதிரிகள் மகாலெட்சுமி, ஆரோக்கியராஜ் ஆகியோர்களை தெரியும். கடந்த 2011–ஆண்டு மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் மருந்தக பிரிவில் மருந்து எடுத்து கொடுக்கும் பணிக்காக ஆரோக்கியராஜும், மகாலெட்சுமியும் என்னை அழைத்தார்கள். அதன் பின்னர், நான் அங்கு மருந்தக பிரிவில் விற்பனையாளராக பணிக்கு சென்றேன். நான் மருந்துகளையும் மட்டும் எடுத்துக்கொடுப்பேன். நான் வாடிக்கையாளர் கொடுக்கும் பணத்தினை மகாலெட்சுமியிடமோ அல்லது ஆரோக்கியராஜிடமோ கொடுப்பேன் அவர்கள் மீதி தொகை இருந்தால் என்னிடம் கொடுப்பார்கள். நான் அதனை வாடிக்கையாளர்களிடம் கொடுப்பேன். பில் புக்கில் இருப்பவைகளை என்னிடம் மகாலெட்சுமி சிட்டாவில் எழுத சொல்லுவார். தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 81–ன் கீழான விசாரணை அதிகாரியிடம் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.15** ஆகும். என்னை வணிககுற்றப்புலனாய்வு போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :–

1ம் எதிரி அந்த மருந்தகத்தில் மருந்தாளராக பணிபுரிந்தார். என்னை <u>மதிவாணன்</u> என்ற விசாரணை அதிகாரி என்னை விசாரிக்கவில்லை.

CJM, MAYILADUTHURAI.

எந்தவொரு அதிகாரியும் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை. அந்த கையெழுத்து எப்போது எந்த நேரத்தில் போட்டேன் என்றால் ஞாபகம் இல்லை.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

S. Pattik

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.

# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.11 நாள் 20.11.2025

| CC. No. | 238/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | பார்த்தசாரதி | த/பெ. | இளசேகரன் |
| வயது | 33 | தொழில் | பைனான்ஸ் |
| கிராமம் | வீதிவிடங்கன் | தாலுக்கா | நன்னிலம் |

(எதிரிகள் ஆஜர்,).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தற்போது குமரன் தெரு, வீதிவிடங்கன் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் சமாஸ்தா பைனான்ஸில் விற்பனையாளராக பணிபுரிகிறேன். நான் திருவாரூரில் உள்ள ஸ்ரீ முருகப்பா Pharma நிறுவனத்தில் மருந்து விற்பனை பிரதிநிதியாக முன்பு பணிபுரிந்து வந்தேன். மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் மருந்தக பிரிவில் மருந்து பொருட்கள் வழங்கியதில் வரவு செலவுகளின்படி தொகைகள் காசோலை மூலம்தான் பெறப்படும். மேலும், கொள்முதல் திருப்பம் என்ற அடிப்படையில் எந்த நிலுவையும் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் 23.11.2013 Invoice No. CR406 மற்றும் 09.12.2013 தேதியிட்ட Invoice No. CR508 ஆகிய இரண்டு இரசீதுகளின் மொத்த தொகை ரூ.874/- அடிப்படையில் MCCW மருந்தகப்பிரிவிலிருந்து ஸ்ரீ முருகப்பா Pharma எங்களது கம்பெனிக்கு திருப்பி அனுப்பியதை நாங்கள் பெற்றுக்கொண்டோம். என்னிடம் காண்பிக்கப்படும் 01.04.2011 முதல் 27.01.2014-ல் MCCW ஸ்ரீ முருகப்பா Pharma நிறுவனத்தில் கொள்முதல் செய்த விபர பட்டியலில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த விபர பட்டியல் **அ.சா.ஆ.16** (எண்ணிக்கை 4 ஆகும்.) ஆகும். அந்த ஆவணத்தின் படி மேற்சொன்ன இரண்டு தொகைகள் கொண்ட invocie மட்டும்தான் திருப்பப்பட்டுள்ளது. இது குறித்து கூட்டுறவு விசாரணை அதிகாரி விசாரித்தார். நான் அவரிடம் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம்

CJM, MAYILADUTHURAI.

என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ. 17** ஆகும். என்னை வணிககுற்றப்புலனாய்வு போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

ஸ்ரீ முருகப்பா Pharma நிறுவனத்தில் நான் விற்பனை பிரதிநிதி மட்டும்தான். அந்த உரிமையாளர் பெயர் செல்வராஜ். அந்த நிறுவனத்தில் நடக்கும்கொள்முதல் குறித்து சொல்வதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். மருத்துவ விற்பனை பிரதிநிதியின் பணி அந்த பொருள் குறித்து விளம்பரம் செய்வது மட்டும்தான். ஸ்ரீ முருகப்பா Pharma நிறுவனத்தில் மேலாளர் மற்றும் மற்ற பணியாளர்கள் உள்ளனர். நான் ஸ்ரீ முருகப்பா Pharma நிறுவனத்தில் பணியாளர் தான். நான் வருகை பதிவேட்டில் கையெழுத்து போடுவேன். நான் ஸ்ரீ முருகப்பா Pharma நிறுவனத்தில் பணிபுரிவதாக போலீசார் விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது முற்றிலும் தவறு என்றும், ஸ்ரீ முருகப்பா Pharma நிறுவனத்தில் விற்பனை பிரதிநிதி என்றுதான் போலீசாரால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இந்த வழக்கிற்காக பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. யார் கேட்டு நான் தாக்கல் செய்த Invocie பட்டியலை எடுத்துக்கொடுத்தேன் என்றால் நாணாகத்தான் எடுத்து கொடுத்தேன். இந்த வழக்கு குறித்து எதுவும் தெரியாது என்றும், போலீசார் சொன்னதற்கு ஏற்ப அவர்களுக்கு பவியப்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.